

உ

விநாயகர் துணை

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

விநாயகர் மாண்பு

★

அரியலூர் மாநாட்டாண்மை உயர்நிலைப்பள்ளி
தலைமைத் தமிழாசிரியர்
உயர்திருவாளர்
புலவர் க. முருகேச முதலியார் அவர்கள்
எழுதியது

★

ாசக மன்றம்
அரியலூர்

மணிவாசக மன்ற வெளியீடு 2

உ
விநாயகர் துணை
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

விநாயகர் மாண்பு

★

ஆசிரியர்
உயர்திருவாளர்
புலவர் க. முருகேச முதலியார் அவர்கள்
தலைமைத் தமிழாசிரியர்
மாநாட்டாண்மை உயர்நிலைப்பள்ளி
அரியலூர்

★

இஃது
அரியலூர்
மணிவாசக மன்றத்தில்
வெளியிடப்பட்டது
ஏவிளம்பி
1957

விலை: ரூ. 0—5—0

முதற் பதிப்பு.



தியோடர் பிரஸ், திருச்சிராப்பள்ளி—2



விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

— மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை

தியானம்

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரஸன்ன வதனம் தியாயேத் சர்வவிக்னோப சாந்தயே.

விநாயகர் ஷோடஸ (பதினாறு) நாமங்கள்

---

1. ஓம் சுமுகாய நம:
2. ஓம் ஏகதந்தாய நம:
3. ஓம் கபிலாய நம:
4. ஓம் கஜகர்ணிகாய நம:
5. ஓம் லம்போதராய நம:
6. ஓம் விகடாய நம:
7. ஓம் விக்ன ராஜாய நம:
8. ஓம் கணாதிபதியே நம:
9. ஓம் தூமகேதுவே நம:
10. ஓம் கணாத்யக்ஷாய நம:
11. ஓம் பாலசந்த்ராய நம:
12. ஓம் கஜாநநாய நம:
13. ஓம் வக்ரதுண்டாய நம:
14. ஓம் சூர்ப்பகர்ணாய நம:
15. ஓம் ஹேரம்பாய நம:
16. ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம:

சுலோகம்

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்திர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ந விநாயக பாத நமஸ்தே.

பொருள் அடக்கம்

உ

விநாயகர் துணை
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நன்றியுரை

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை யுள் நாடு."

'விநாயகர் மாண்பு' என்ற இந்நூல் அரியலூர் மணிவாசக மன்றத்தின் இரண்டாவது வெளியீடாக வெளிவருகின்றது. இதனை எழுதி அருளியவர்கள் அருளாளர் புலவர் உயர்திரு. க. முருகேச முதலியார் அவர்கள் ஆவார்கள். மன்ற முதல் வெளியீடாகிய "அழுது அடியடைந்த அன்பர்" நூலின் நன்றி உரையில் மன்றத்தினைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டுவன வற்றை விரிவாகத் தெரிவித்திருக்கின்றோம்.

சிறியேங்கள் அரியலூர் உயர்நிலைப் பள்ளியில் பயின்றகாலை இந்நூலை எழுதிய ஐயா அவர்களிடமும் தமிழ்மொழி பயிலும் பேறுபெற்றோம். அவர்கள் தமக்கே உரிய நனி இனிய தனித் தன்மையால் இலக்கண இலக்கியப் பாடங்களை நன்கு விளக்கித் தெளிவுபட எடுத்துரைப்பார்கள். அவ்வாறு அவர்கள் பாடம் போதிப்பது மாணவர்களுடைய செவிகளையும் சிந்தையையும் குளிர்வித்து இன்பம் பயப்பதாக இருக்கும். செய்யுட் பாடம் சொல்லத் துவங்கினால் அவ்வச் செய்யுளுக்கு உரிய முறையிற் பிறழாது இசையோடு பாடி முடிப்பதைக் கேட்கும்போதும் பின்னரும், 'புலவர்கள் இருந்து இன்றமிழாய்ந்த தென்றிசைக் கூடலில் 'இறையனார்' என்ற திருப்பெயர் தாங்கி ஓர் புலவராய் அமர்ந்து அகப்பொருள் இலக்கண நூல் செய்தருளிய இறைவன்—ஏழிசையாய் இசைப் பயனாய் உள்ள ஆண்டவன்—திருவருளாலே அவர்களுடைய திருவாக்கில் அமைக்கப்பட்ட இனிமையின் சிறப்புத்தான் என்னே!' என்று எண்ணி ஏழையேங்கள் மனம் மகிழ்ந்ததும் மகிழ்வதும் உண்டு. அக்காலம் தொட்டு அவர்கள் ஏழையேங்கள்பால் கொண்டுள்ள பேரன்பிற்கும் பெருகருளிற்கும் அளவே இல்லை.

ஒரு முறை அவர்களைக் கண்டுகொள்ளச் சென்றிருந்த போது 'விநாயகரைப்பற்றியதொரு சிறு நூல் எழுதவேண்டுமெனக் கருதுகின்றோம்' என்று தெரிவித்தலும் எது ஒன்றையும் கருத்தறிந்து முடிப்பாராகிய அவர்கள் தாமே எழுதித் தரத் திருவுளங்கொண்டு அவ்வாறே எழுதிக் கொடுத்தருளினார்கள். முதலாவதாக வெளியிட இருந்த இந்நூல் எழுதி முடிக்கப் பெறாமலிருந்ததால் அடுத்ததாகவும், ஏற்கனவே எழுதப்பட்டிருந்த 'அழுது அடியடைந்த அன்பர்' நூல் முதலாவதாகவும் வெளியிடப்படுவதாயிற்று.

இந்நூலை எழுதிக்கொடுத்தவர்களும், முன்னர்ப் பொதுவாகவும், மன்றம் ஏற்படுத்தப்பட்ட பின்னர்ச் சிறப்பாகவும் ஏழையேங்களிடம் நிறைந்த அன்பும் கனிந்த அருளும் உடையவர்களும், ஏழையேங்களுடைய நலமும் மன்றத்தினுடைய நலமுமே தமது உயிரினும் உயர்வுடையதாகக்கொண்டு தமது பெருமை வாய்ந்த பொறுமைக் குணத்தினால் மாறு ஆதலோ, வேறு ஆதலோ இன்றி ஒன்றியே ஒன்றாய்க் கலந்து இருந்து பழகி ஓம்பி வருபவர்களும், ஏழையேங்களினுடைய ஆசிரியரும் மன்றத்தினுடைய துணைத் தலைவரும் ஆகிய திரு. ஐயா அவர்களுக்கு ஏழையேங்கள் காட்டும் பணிவினுக்கும் வணக்கங்களுக்கும் அறிகுறியாக இதனை வெளியிட்டு அவர்களுக்கே சமர்ப்பித்து ஏழையேங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்கட்கு மேலும் நலம் எல்லாம் அருள்செய்ய வேண்டுமென்று சிவமும் சத்தியுமாக விளங்கும் தில்லைக் கற்பக விநாயகப் பெருமானுடைய திருவடிகளை வணங்குகின்றோம்.

"கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே"

அரியலூர்.
21—8—57

மாணவச் சிறுவர்கள்

திருசிரபுரம் ‘பெருஞ்சொல் விளக்கனர்’ ‘முதுபெரும் புலவர்’

உயர்திருவாளர் அ. மு. சரவண முதலியார் அவர்கள்

வழங்கியருளிய

மதிப்புரை

அரியலூர் உயர்நிலைப்பள்ளியின் தலைமைத் தமிழாசிரியரும் எனது இன்னுயிர் நண்பருமாகிய திருவாளர், வித்துவான், க. முருகேச முதலியாரவர்களால் எழுதப் பெற்று, அவ்வூர் மணி வாசக மன்றத்தின் இரண்டாவது வெளியீடாக வந்த ‘விநாயகர் மாண்பு’ என்னும் நூலைப் படித்துப் பார்க்கும் பேறுபெற்றேன்.

இந்நூலாசிரியர் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமி கள் என நாடவர் அனைவராலும் தமது கல்வியாலும், சொல் வன்மையாலும் அறியப்பெற்று, காலஞ் சென்ற ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரியரவர்களின் மாணவர்.

இப்போது ‘அண்ணுமலைப் பல்கலைக் கழகம்’ என்ற பெயரோடு காட்சியளித்துவரும் ஒப்புயர்வற்ற ஸ்தாபனம், தொடக்கத்தில் ‘மீனுட்சி கல்லூரி’ என்ற பெயருடன், சிதம் பரத்தில் நடைபெற்றகாலை, அக்கல்லூரித் தலைவராயிருந்த கல்விக் கருவூலம் காலஞ்சென்ற டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்களிடம், அக்கல்லூரியிற் சேர்ந்து பயின்று ‘வித்துவான்’ பட்டம் பெற்றவர்.

ஒருவருடைய கல்வித் திறமை, பண்புடைமை முதலிய வற்றை அறிந்துகோடற்குக் காரணமாக உள்ள பல வழிகளுள் அவர் யாருடைய மாணவர் என்று தெரிந்துகொள்ளுதல் தலையாய வழி என்பதை யாரே மறுக்கவல்லார்! எனவே அவ் விருபெருமக்களிடத்திற் கல்விபயிலும் பேறு பெற்ற இந் நூலாசிரியர் பெருமையை நுவலவும் வேண்டுமோ!

இனி இவ்வாசிரியர் யாத்த 'விநாயகர் மாண்பு' என்ற இந்நூலும் காலத்திற்கேற்ற கருத்துக்களைக்கொண்டு காட்சியளிக்கிறது. விநாயகரைப்பற்றிய பல்வேறு கருத்துக்களும், ஆராய்ச்சிகளும் மலிந்த இக் காலத்தில் இப்பெற்றித்தாய ஓர் நூல் வெளிவருதல் மிகமிக அவசியமன்றோ!

விநாயகரின் பெயர்கள், அப்பெயர்க் காரணங்கள், உறுப்புக்களின் தத்துவங்கள், அவரை வணங்குமுறை, வணங்குவோர் அடையும் பயன் முதலிய இன்னோரன்ன குறிப்புக்களடங்கிய இந்நூலைத் தமிழ் மக்கள் படித்துப் பயன்பெறுவார்களென்று உறுதியாக நம்புகிறேன்.

திருசிரபுரம்,
25—9—'57.

அ. மு. சரவணன்

முன்னுரை

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

— திருமந்திரம்

உலகில் எறும்புமுதல் எறும்பி ஈருக எண்ணில் பல்கோடி உயிர்கள் உள்ளன. இறைவன் அவைகட்கு, வினைகளுக்கேற்ப உடல்களைக் கொடுக்கிறான். அவ்வுயிர்களுள் நல்வினையால் மானிட உடல்களைப் பெற்ற உயிர்கள் முதலான ஆறறிவுயிர்களே சிறப்புவகையால் உய்யுநெறியினை உய்த்துணரும் பெரும் பேறுபெற்றவையாகும். அவ்வுய்யுநெறியாவது : 'இறைவனருளால் கொடுக்கப்பெற்ற நம் உடம்பை இருவினைக்கண் செலுத்தாமல் இறைபணிக்கண் செலுத்துவதே.' இதனை,

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே"

என்ற திருநாவுக்கரசர் திருவாக்காலும் தெளியலாம். பெறுதற்கரிய மனிதப்பிறவி எடுத்த நாம் பிறப்பினைப் போக்கிப் பேரின்பப் பெருவாழ்வு வாழ இறைவனை வழிபடவேண்டும். அவ்வழிபாட்டில் முதற்கண் செய்யப்படவேண்டுவது விநாயகர் வழிபாடாகும். அவரை வழிபட அகரமென அறிவாகி உலகமெங்கும் அமர்ந்தருளும் அவ்விநாயகர் மாண்பை அறிந்து கொள்வது அவசியமன்றோ ?

'விநாயகர் மாண்பு' என்னும் தலைப்பில் இந்நூலை எழுதியுள்ளேன். விநாயகர் தோற்றத்தைப்பற்றியும் அவரது மாண்பினைப்பற்றியும் பலர் பலவாறு மாறுபடவும் வேறுபடவும் நினைக்கிறார்கள், பேசுகிறார்கள். அவ்வாறு நினைப்பதும் பேசு

வதும் பெருந் தவருகும். விநாயகர் வரலாறுகளை நன்குணர்ந்து அவைகளிலுள்ள உண்மைப் பொருள்களையே நாம் அறிந்து கொள்ளவேண்டும். வள்ளுவரும், 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றே நவின்றுர். விநாயகரின் உண்மைப் பொருளை யான் அறிந்தவனல்லேன். ஆயினும் அவர்மீது எனக்கு அள விறந்தபற்று உண்டு. அப்பற்று தூண்டுதலும் அப்பெருமா னுடைய திருவருள் கூட்டுவிக்க யான் கற்றனவற்றையும் கேட்டனவற்றையும் துணையாகக்கொண்டு இந்நூலை எழுதலா னேன். இதில் இறைவன் வழிபாடு, விநாயகர் பெயர்க்கார ணம், அவர் தோற்றம்பற்றிய புராண கதைகள், விநாயகபுரா ணம், அவர் செய்த அருஞ்செயல்கள், தமிழகத்தில் விநாயகர் காலம், அவரை வழிபடும் பிறசமயத்தார், அவர் திருவுருவ அமைப்பு, அவயச்சிறப்பு, விநாயகர் வழிபாடு, விநாயகர் தோத்திரங்கள் என்ற பகுதிகள் சுருங்கிய முறையில் அடங்கி யுள்ளன.

இச்சிறு நூல், விநாயகர் மாண்பினை அறிந்தார்க்கு அதனை மீட்டும் நினைவுபடுத்துவதாகவும், அறிய விரும்புவார்க்கு அறிவித்திலதேனும் அறிந்துகொள்ளச் சற்றே துணை செய்வ தாகவும் அமையுமென நம்புகிறேன். ஆகவே இவ்வாறு ஓரளவு பயன்படும் இந்நூலை, அவ்விருபாலாரும் ஏனைய தமிழ்ச்சைவ அன்பர் ஆயினும் பெற்றுப்படித்து விநாய கப்பெருமானுடைய மாண்புகளை உணர்ந்து அப்பெருமான்றன் திருவடியினை வணங்கிப் பேரின்பம் பெறுமாறு வேண்டுகின் றேன்.

இந்நூலை நன்முறையிற் பதிப்பித்தவர்களும், அரியலூர் மணிவாசக மன்றத்தினருமாகிய என்னுடைய மாணவர்கள், மு. பாலசுப்பிரமணியம், க. குமரவேல் இருவருக்கும் எனது உளங்கலந்த ஆசி என்றுமே உரியது.

சிறு நூல் என்றெண்ணுது மதித்து மதிப்புரை வழங்கிய பெரியார், திருசிரபுரம், 'பெருஞ்சொல் விளக்கனர்' 'முது பெரும் புலவர்' உயர்திரு. அ. மு. சரவண முதலியார் அவர் களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்ச் சைவ உலகத்தினை இந்நூலில் நலங்கள் காணப்படின் அவைகளைக் கற்றுத் தேர்ந்த முற்றுணர்வினரும் எனது குருநாதருமாகிய திருக்கோவலூர் ஆதீனம் ஐந்தாம் பட்டம் திருப்பெருந்திரு **ஞானியார் சுவாமிகளுடைய** திருவடிகட்கே ஆக்கி, அல்லாதவைகள் காணப்படின் அவைகளை அடியேன் பாற்படுத்தி ஏற்றுக்கொள்ளவேண்டுமாய் வணங்கி வேண்டிக் கொள்கின்றேன்.

"வாழைக் கனிபல வின்கனி மாங்கனி தாம்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பம்எள் ளுண்டைஎல்
லாம்நுகர்ந்தும்
பேழைப் பெருவயிற் றேடும் புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர் மேனி விநாயகனே"

— மூத்த விநாயகர் திருவிரட்டை மணிமாலை

அரியலூர்
21—8—1957

க. முருகேச முதலியார்

விநாயகர் மாண்பு

விநாயகர் வணக்கம்

அகரமென அறிவாகி யுலக மெங்கும்
அமர்ந்தகர வுகரமக ரங்கள் தம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பல்வேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந் தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரில்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்

— விநாயக புராணம்

1. இறைவன் வழிபாடு:

உண்மை, அறிவு, இன்பம் என்னும் இம்மூன்றும் உலகில் என்றும் உள்பொருளாம். இம்மூன்றினையும் வெறுப்பார் ஒருவருமிரார். இம்மூன்றின் நிலைக்களமே இறைவனும். அல்லது 'சிவம்' என்றுங் கூறலாம். 'சிவம்' என்னும் சொல் மங்கலம், நன்மை என்ற பொருளைத் தரும். எப்பொருள் என்றும் இல்பொருளாகாமல் உள்பொருளாய் அழிவில்லாமல் நிலை பெற்று மற்றெல்லாப் பொருள்களும் தன்னிடத்தினின்றும் தோன்றி தன்னிடத்தே ஒடுக்கங்கொள்ள நிற்கின்றதோ அப்பொருளே சிவம் எனும் உண்மைப் பொருளாம். எப்பொருள் உயிர்களின் அறிவை விளக்குமோ அப்பொருள் சிவம் எனும் அறிவுப் பொருளாம், எப்பொருள் அளவில்லாத இன்பமுடையதாய் உயிர்கள் துய்க்கும் இன்பத்திற்கு இடனாய் நிற்குமோ அப்பொருள் சிவம் எனும் இன்பப்பொருளாம். இம்மூன்றினையும் சச்சிதானந்தம் என்று உரைப்பதனால் நன்கு தெளியலாம். 'சத்து' என்றால் உண்மை. 'சித்து' என்றால். அறிவு. 'ஆனந்தம்' என்றால் இன்பம் என்று பொருள்படும். உண்மை யாவது எக்காலத்தும் இல்பொருளாகாமல் உள்பொருளாய்த்

தோற்றக்கேடுகளின்றி இருத்தல். அறிவாவது முற்றுணர்வுடையவனுயிருத்தல். இன்பமாவது அளவில் இன்பமுடையவனுயிருத்தலாம். இவ்வாருய இறைவனை வணங்க வேண்டியது நமது முதற் கடமையாகும். அப்பொழுதுதான் நம்மைப் படைத்த ஆண்டவனுக்கு நாம் நன்றி செலுத்தியவர்களாவோம். வீடுபேறு பெறுவதோடு தூய வாழ்வு வாழவும் இறைவன் நினைவு அவசியமே. ஏனெனின் உயிர்கள் சார்ந்த தன் வண்ணமாம் தன்மையுடையன. எனவே உள்ளன்புடன் இறைவனை இடைவிடாது வழிபடின் இறைவன் பண்புகள் நம்மிடம் வந்து சேரும் என்னும் நினைவுபற்றியே சைவர்கள் சிவத்தையும், உமையையும், விநாயகரையும், முருகனையும் வழிபட்டனர். இவர்கள்போன்றே பிறசமயத்தாரும் தங்கள் தங்கள் இறைவனை வழிபட்டார்கள் என்று தெரிகிறது. சைவர்கள் முதலில் விநாயகரை வழிபட்ட பின்னரே பிற தெய்வங்களை வழிபடுவதுண்டு. ஆதலின் அவருடைய மாண்பினைத் தெரிந்துகொள்வது மிக மிக அவசியமாகும்.

2. விநாயகரின் பெயர்கள் :

1. விநாயகர்:—'விநாயகர்' என்ற சொல் பல அருமையான கருத்துக்களைக் கொண்டது. வி - மேலான. நாயகர் - தலைவர். என்று கூறலாம். 'வி' - மேலான என உயர்வுசிறப்பையும், தமக்குமேல் ஒரு நாயகர் இல்லாதவர் என எதிர்மறையையும் உணர்த்தும். விநாயகர் வேறு, பரமசிவம் வேறு என்று கூறுவது பொருந்தாத கூற்றாகும். எனவே ஒப்புயர்வற்ற தனிப்பெருமிறையே விநாயகர் ஆவர். விநாயகருக்குப் பல பெயர்களிருப்பினும் அவைகளுள் 'பிள்ளையார்', 'கணபதி' என்ற பெயர்களையே மிகுதியாகக் கூறுவார்கள்.

2. பிள்ளையார் :—உலகமெங்கும் அமர்ந்தருளும் பிள்ளையார் ஓங்கார மெய்ப்பொருளே ஆவர். இளஞ்சேயாகிய முருகனுக்கு **இளைய பிள்ளையார்** எனும் பெயரும், மூத்த சேயாகிய யானை முகப்பெருமானுக்கு **மூத்த பிள்ளையார்** எனும் பெயரும் உண்டு. ஆனல் சிறப்பாகப் 'பிள்ளையார்' எனும் பெயரை மூத்த சேயாகிய விநாயகர்க்கே வழங்குவர். பிள்ளை+ஆர்

'ஆர்' சிறப்புவிகுதியாகும். பிள்ளை+யார் என்று 'யார்' என்பதனை வினாவாக ஆக்கி அதற்கு விடையாகச் சிவனே பிள்ளையாக வந்தார் என்று பொருள் கோடலும் பொருந்தும். விநாயகர் துதிக்கையிற் குடங்கொண்டு நீர்கொண்டு 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' எனத் தாய்தந்தையரை நீராட்டும் துதிக்கையை உடையவர் ஆதலால் 'பிள்ளையார் எனும் சிறப்புத் திருநாமமும் பெற்றுராவர்.

3. **கணபதி** :—விநாயகர்க்குரிய பெயர்களுள் 'கணபதி' என்பது ஒன்று. 'க' என்றால் ஞானத்தையும், 'ண' என்றால் வீடுபேற்றையும் 'பதி' என்றால் தலைவன் என்பதையும் உணர்த்தும், மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் கணபதியை வழிபடின் ஞானத்தையும் வீடுபேற்றையும் எளிதில் பெறக்கூடும். நம் முன்னோர் புதிதாகத் தொடங்கும் எச்செயலையும் கணபதியை வழிபட்டே தொடங்குவார்கள். அக் கணபதியின் அருளோடு செய்யின் அச் செயல் வெற்றியுடன் நிறைவேறும். அவன் அருளின்றிச் செய்யின் அச் செயலுக்கு இடையூறு ஏற்படுவது திண்ணம், இவ்வெண்ணம் நம் முன்னோருடைய உள்ளத்தில் ஆழ்ந்து வேரூன்றிய எண்ணமன்றோ ?

நிகண்டுகளில் உள்ள விநாயகர் பெயர்கள் :—

"பால்புரை நீற்றோன் மகன்பார்ப் பதிமைந்தன்
மான்மருகன் காமவேள் மைத்துனன்—வேள்முருகன்
முன்னோன் கணபதி மூவா விநாயக
னென்னோன் பகைதனிக்கு மேறு.

விநாயகர் பெயர்கள் :—சிவன் மகன், பார்ப்பதி மைந்தன், மான் மருகன், காமவேள் மைத்துனன், முருகன் முன்னோன், கணபதி.

அங்குச பாச தரனாகு வாகன
னைங்கரத்தோ னாறு நிகர்மதத்தன்—வெங்கண்
ணிருமருப்பு மாமுகத்தன் முக்க ணிறைவ
னொருமருப்ப னென்னுள்ளத் தோன்.

அங்குசபாசதரன், ஆகுவாகனன், ஐங்கரத்தோன். ஆறு நிகர்மதத்தன், யானை முகத்தன், முக்கணிறைவன். ஒருமருப்பன்

— காங்கேயர் செய்த உரிச் சொனிகண்டு

**அங்குச பாசமேந்தி யம்பிகைதநயன் முன்னோ
னைங்கரன் மூத்தோ னொற்றையணி மருப்பினனேரம்பன்
கங்கை பெற்றோன் முக்கண்ணன் கணபதி யீசன்மைந்தன்
வெங்கய முகனே யாகுவாகநன் விநாயகன் பேர்.**

விநாயகர் பெயர்கள் :—அங்குசபாசமேந்தி, அம்பிகைதநயன், முன்னோன், ஐங்கரன், மூத்தோன், ஒற்றை மருப்பினன், ஏரம்பன், கங்கை பெற்றோன், முக்கண்ணன். கணபதி, ஈசன் மைந்தன், கயமுகன், ஆகுவாகநன்,

— மண்டல புருடன் செய்த சூடாமணி நிகண்டு

விநாயகன் :—1. அங்குசபாசமேந்தி, 2. அம்பிகைதநயன், 3. அரிமருகன், 4. ஆகுவாகனன், 5. இறை மகன். 6. ஈசன் மைந்தன், 7. ஏகதந்தன். 8. ஏரம்பன். 9. ஐங்கரன், 10. ஒற்றைக்கொம்பன். 11. கங்கை பெற்றோன், 12. கணபதி, 13. கயமுகன், 14. கரிமுகன், 15. கவுரி சேயன். 16. காமன் மைத்துனன், 17. நால்வாயன், 18. பாசாங்குசன், 19. முக்கண்ணன், 20. முன்னோன், 21. மூத்தோன், 22. விக்னேச்சுரன்.

— வீரமாமுனிவர் செய்த சதுரகராதி

இவ்வாறு பல நூல்களில் விநாயகர்க்குரிய பல பெயர்களைக் காணலாம்.

3. விநாயகர் தோற்றம்பற்றிய புராண கதைகள் :—

1. விநாயகர் தோற்றங்குறித்துப் புராண கதைகள் மிகுதியாகவுள்ளன. அவற்றுள் சிலவற்றை ஈண்டு எழுதுவேன். முன்பொரு வமயம் கயமுகாசுரன் எனும் அசுரன் ஒருவன் இருந்தான். அவன் சிவத்தை நோக்கித் தவத்தைச் செய்தான். அத்தவத்தால் அவன் எப்படையினாலும், எம்மக்களாலும் இறவாதிருக்க வரம் பெற்றான். ஆனால் யானையின் உருவத்தில் வருகின்றவனால் இறவாதிருக்க வரம்பெற்றானில்லை. அவன் இறைவனை நோக்கிச் செய்த தவமோ மெய்த்தவமன்று. பொய்த்தவமாகும். தவமென்பதற்கு மனம், பொறி வழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும்,

கோடைக்கண் வெயினிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்து, பிற உயிர்களை ஓம்புதல் என்று பரிமேலழகர் பொருள் கண்டார், 'உற்ற நோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை யற்றே தவத்திற் குரு'—என்றார் பொய்யில் புலவர், கயமுகாசுரன் இவ்வியல்பில் நின்றானில்லை. பிற உயிர்களுக்குத் துன்புறுத்தலையே தொழிலாகக் கொண்டான். அவன் மெய்த்தவம் செய்திருந்தால் அவன்மாட்டிருந்த ஆணவ மல மயக்கம் நீங்கியிருக்கும். அம் மல மயக்கம் நீங்கப் பெறாமையினால் அவன் வானவர்களையும் துன்புறுத்தலாயினான், அத்துன்பத்திற்காற்றாது வானவர்கள் கைலை வாழ் சிவத்திடம் சென்று தங்களுக்குக் கயமுகாசுரன் செய்துவரும் கொடுமையைக் கூறினார்கள், இக்குறையைக் கேட்ட கைலை நாதன் அதற்கு ஆம் முறை செய்யத் திருவுளங் கொண்டு, "நாம் மாறுபட்ட திருமேனியாகிய ஆனை முகத்தோடு வந்து அவனை அடக்குவோம்." என்று நவின்று வானவர்களைத் தங்களிடஞ் செல்லுமாறு ஆணையிட்டார். அதன்பிறகு ஒரு அமயம் கைலைநாதன் தன் உமையோடு கைலை மலைமீதுள்ள ஓரழகிய நந்தவனத்தில் உள்ள ஓவியச் சாலையை வசந்த காலத்தில் அடைந்தார். அவ்வோவியச் சாலையில் எழுதப்பட்டுள்ள மந்திர வடிவங்களாகிய ஓவியங்களை உமையம்மைக்குக் காட்டினார், தான் அவ்வோவியங்களில் பிரணவ வடிவினதாகிய ஆண் யானை வடிவத்தை எடுத்துக்கொள்வதாகக் கூறி உமையம்மையைப் பிரணவ வடிவினதாகிய பெண் யானை வடிவத்தை எடுத்துக்கொள்ளும்படி கூறினார், கயமுகாசுரன் யானை முகமுடைய ஒருவரால் அழிக்கப்படவேண்டியிருத்தலின் சிவமும் சத்தியும் ஆண் பெண் யானையாக உருக்கொண்டு மந்திர உடல் வடிவங்களாக இயைந்து ஒன்றுபட்டபோது அப்பிரணவ மந்திர உருவமாகிய விநாயகர் தோன்றினார். அவ்வாறு தோன்றிய விநாயகரை இறைவனும், இறைவியும் அழைத்துவந்து, "நீயே மேலான நாயகம்" என்று கூறி, "உன்னை அடைந்து வழிபடுவோர்க்கு நற்பேறளிப்பாயாக" என்று வரம் தந்தார்கள்.

"என்னின் வேறுமா காமலென் பிள்ளையா யிருக்கு
நின்னை யாவர்க ணினைந்தடி வணங்குகின் ரூர்க
ளன்னர் பாலிடை யூறுக ளனைத்தையு மறுத்து
மன்னு காமங்கள னைத்தையும் வழங்குக விரைவின்"

"கணங்களுக் கெல்லா முதன்மையாம்
பதியாய்க் கருணைசெய்திடுக வெம்மருளா
லிணங்குமிச் செயலாற் கணபதி
என்ன யாவரும் இயம்புக நின்னை
யணங்கற வெவரு மெந்தக்கா ரியத்து
மன்புடன் முன்னுற நாளும்
வணங்குக யாவ ராயினு நின்னை வணங்கு
ரூர்க் கிடர்களே புரிக"

—விநாயக புராணம், கணபதி திருவவதாரப் படலம்

என்ற பாடல்களும் ஈண்டு நோக்கத்தக்கன. பின்னர் விநாயக ரிடம் வானவர்கள் வந்து கயமுகனுல் தாங்கள் அடையும் இன்னலைப்பற்றி எடுத்துரைக்க விநாயகர் கயமுகாசுரனைத் தன் கொம்புகளில் ஒன்றை ஒடித்து அதனையே ஆயுதமாகக் கொண்டு அழித்தார். இறந்த கயமுகாசுரன் மூஷிக (பெருச்சாளி) வடிவங்கொண்டு எதிர்த்துவர அதனை அடக்கி ஊர்தி யாகக்கொண்டு அதன்மீது எழுந்தருளினுர் என்று விநாயக புராணங் கூறுகிறது. இக் கதையால் பெண் யானை ஓவியத்தை உமையும் ஆண் யானை ஓவியத்தைச் சிவனும் கருத்து ஒன்றும் முறையில் ஒத்து உற்று நோக்க அக்கருத்து ஒற்றுமையின் விளைவாக (மானஸிக புத்திரன்) என்னும் முறையில் விநாயகர் தோன்றினுர் எனக் கொள்ளுதலே சாலவும் பொருத்தமுடைத்தாகும்.

'ஓம்' என்னும் பிரணவ வடிவமே சிவசத்தியாகும். சிவம் ஆண் யானை. சத்தி பெண் யானை. இத்தோற்றத்திலிருந்தே விநாயகர் தோற்றம் உண்டாயது என்பதைச் சைவசமயத்திற்கே மெய்ஞ்ஞான குரவர்களாக விளங்கும் நால்வருள் முதல்வராகிய பெருஞானங்கொண்ட திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.—என்று

அருள் செய்தார். உலகமே ஆண் பெண் உருவம். கைலை காணுது ஐயாறு அடைந்த அப்பரும் உலகில் அனைத்தும் ஆண் பெண் வடிவங்களாகத் திகழ்வதைக் காண்கிறார். சிவமின்றிச் சத்தியில்லை, சத்தியின்றிச் சிவமில்லை. இதனைக் கீழ்வரும் சிவஞான சித்தியார் சுபக்கச் செய்யுளால் உணரலாம்.

" சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லா
மொத்தொவ்வா வாணும் பெண்ணு முணர்குண குணியுமாகி
வைத்தன ளவளால் வந்தவாக்க மிவ்வாழ்க்கை யெல்லாம்
இத்தையு மறியார் பீட லிங்கத்தினியல்பு மோரார்."

2. ஒரு சமயம் உமையம்மை மண்ணால் உருச்செய்து உயிர் கொடுத்து உவகையுடன் அவ்வுருவைக் காத்துவந்தார். இதை யறிந்த வானவர்கள் அங்கு வந்தார்கள். அவர்களுடன் சனி பக வானும் வந்தார். அவர் பார்வை அக்குழந்தையின்மேல் விழுந் ததனால் அதன் தலை அறுபட்டது. அற்றதலையும் மறைந்தது. இதுகண்டு அம்மை அல்லலில் ஆழ்ந்தார். இதையறிந்த சிவ பெருமான் பூதங்களை விடுத்து வடக்கே தலைவைத்து உறங்கும் விலங்கொன்றின் தலையைக் கொணர்க எனக் கட்டளையிட அப் பூதகணங்கள் அவ்வாறு உறங்கிய ஒரு யானையின் தலையைக் கொணர்ந்தார்கள். அதனை அக்குழந்தையின் உடலிற் பொருத்திக் குழந்தையை உயிர்ப்பித்துக் கொடுக்க விநாயகர் ஆனார் என்று சிவபுராணம் கூறுகின்றது.

3. சிவனும், உமையும் ஒருசமயம் உய்யானம் சென்றனர் என்றும், அங்குள்ள " மந்திரசாலி " என்ற மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப்பெற்றிருந்ததென்றும் அதனை இருவரும் உற்றுப் பார்த்தார்கள் என்றும், அப்பிரணவம் பிரிந்து அப்பன் எழுத்தாகிய அகரம் ஆண்யானையாகவும், அம்மை

எழுத்தாகிய உகரம் பெண்யானையாகவும் ஆயிற்று என்றும், அவை இரண்டும் கூடிய இடத்து விநாயகர் தோன்றினர் என்றும் காஞ்சிபுராணம் கூறுகின்றது.

4. உய்யானத்திலிருந்த ஓவியமண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப்பெற்றிருந்ததென்றும் அதனை உமாதேவி உற்று நோக்கினர் என்றும், அப்பிரணவம் பெண்யானையும், ஆண்யானையுமாகி சேர்ந்ததனுல் விநாயகர் தோன்றினர் என்றும் கந்தபுராணம் கூறுகின்றது.

மேற்குறித்துள்ள கதைகளை நோக்குமிடத்து அகரவடிவமாகிய சிவனும் உகரவடிவமாகிய சக்தியும் சேர்ந்ததனுலேயே பிரணவம் என்ற விநாயகர் தோன்றினர் என்பதை நன்கு தெளியலாம். கதைகளில் மெய்ப்பொருளை உணர்வதே சிறந்த அறிவுடைமையாகும்.

4. **விநாயக புராணம் :**—பார்க்கவ புராணம் என்னும் விநாயக புராணத்தை இயற்றியவர் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துக் கச்சியப்ப முனிவர் ஆவர். விநாயக புராணத்தில் இரண்டு காண்டங்கள் உள்ளன. அவை. உபாசனு காண்டம், லீலாகாண்டம் என்பனவாம். விநாயகர் தோற்றத்தை லீலா காண்டத்தில் காணலாம். இந்த லீலா காண்டத்துள் **வக்கிரதுண்டர், சிந்தாமணி விநாயகர், கெசானனர், விக்கினராசர், மயூரேசர், பிந்திய மயூரேசர், பாலசந்திரர், தூமகேது, கணேசர், கணபதி, மகோற்கடர், உடுண்டிவிநாயகர், வல்லபைகணேசர்** எனப் பன்னிரண்டு அவதாரங்களின் வரலாறுகள் காணப்படுகின்றன. இவ்வரலாறுகளுள் சிவனே விநாயகர் என்று தெரிவிப்பனவும் உண்டு. இவ்வாறு கூறப்பெறும் வரலாறுகள் அனைத்தினும் உள்ள விநாயகர் உருவம் உயிர்களின் கருமேனி கழிக்கவந்த ஞானத் திருமேனியாகும்.

மூவர்க்கும் முதல்வர் விநாயகர் :—சிவபெருமான், இவ்வுலகைப் படைப்பதற்காகத் திருவுளங்கொண்டு விநாயகராக வடிவெடுத்தனரென்றும், ரஜஸ், தமஸ், சத்துவமாம் மூன்று குணங்களையும் அயன், அரி, அரனுகப் படைத்தாரென்றும் இம் மூவரும் முறையே படைத்தல், காத்தல், அழித்தலாம்

தொழிலைச் செய்வதற்கு விநாயகரை நோக்கித் தவஞ் செய்தனரென்றும், அவர்களுக்குக் காட்சியளித்துத் தொழிலாற்றலையும், அவரவர்களுக்கு அளித்தனரென்றும் விநாயக புராணத்தில் மூவர் உபாசித்த படலத்தில் கூறப்பட்டிருக்கிறது. இது விநாயகர் மாண்பிற்குச் சாலச்சிறந்ததொன்றாகும்.

5. **விநாயகர் செய்த அருஞ் செயல்கள்:**—1. விநாயகரும் முருகரும் ஒரு கனிக்காக உலகை வலம்வரக் கருதி முருகர் மயில்மீது ஏறி உலகத்தை வலம்வந்தார். விநாயகர் தாய் தந்தையரை வலம் வந்து உலகத்தையே சுற்றி வந்ததாகக் கொண்டு அக்கனியை ஏற்றார். 2. முருகருக்கும் வள்ளியம்மைக்கும் திருமணம் முடிக்க விநாயகர் முன்னின்றார். இதனை 'அப்புனமதனிடை அக்குறமகளுடன் அச்சிறு முருகனை அக்கணம் மணமருள் பெருமாளே' என்பதனால் அறியலாம். 3. ஐந்தாம் மறையாகிய பாரதத்தை வியாசர் கூற விநாயகர் தனது கொம்பினால் எழுதினார். 4. திருமுறைகளைக் கண்டெடுக்க நம்பியாண்டார் நம்பிகட்குப் பேருதவிபுரிந்தார். 5. மெய்கண்டாருக்குத் திருவெண்ணெய்நல்லூரில் பொல்லாப் பிள்ளையாராகி உதவிசெய்தார். 6. சுந்தரரும், சேரமான் பெருமாணயனாரும் திருக்கயிலாயம் சேருமுன் தம்மை வழிபாடாற்றிய ஒளவையாரைத் தமது துதிக்கையால் எடுத்துக் கைலை சேர்த்தார். 7. கோகர்ணத்தில் இராவணனிடமிருந்து வாங்கிய மகாபல இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார். 8 முப்புரத்தை எரிக்கவேண்டித் தன்னை வணங்காமல் சென்ற சிவபெருமானுடைய தேரின் அச்சை ஒடித்தார். இதனை 'முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம் அச்சது பொடிசெய்த அதிதீரா' என்ற புகழ்மொழியால் உணரலாம். 9. திருவலஞ்சுழி, திருமறைக்காடு, கணபதீச்சரம், முதலிய பதிகளில் விநாயகர் சிவபூசை செய்தவருமாவர்.

6. **தமிழகத்தில் விநாயகர் காலம்:**—பரஞ்சோதியென்பவர் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவர் திருஞான சம்பந்தர் காலத்திருந்தவர். இப்பரஞ்சோதியே சிறுத்தொண்டநாயனாராவர். சோழ மன்னனின் வெற்றி குறித்து மகாராஷ்டிரம் சென்றார். வெற்றிகண்டார். வெற்றிக்கு

அறிகுறியாக வாதாபியிலிருந்து விநாயகர் உருவத்தைக் கொண்டுவந்தார் என்றும், அவ்வுருவைத் திருச்செங்காட்டங் குடியில் வைத்துப் பிரதிஷ்டை செய்தாரென்றும் அதனுல் இவர் காலம் ஏழாம் நூற்ருண்டின் நடுப்பகுதி என்றும், இக் காலமே விநாயகர் தமிழகம் வந்த காலமென்றும் ஒரு சிலர் கூறுவதுண்டு.

"காந்தமன் வேண்ட அமரமுனிவன் அகத்தியன்றனது. கரகங் கவிழ்த்த காவிரிப்பாவை"—இது, பெருங்காப்பிய நூல்களுள் ஒன்ருகிய மணிமேகலையில் உள்ளது. 'காந்தமன் எனப் பெயரிய மன்னவன் நாட்டில் நீர்ப் பெருக்கினை விரும்பி வேண்டிக்கொள்ள தேவ இருடியாகிய அகத்திய முனிவன் தனது கமண்டல நீரைக் கவிழ்த்தலாற் போந்த காவிரிப் பாவை' என்று இதற்குப் பொருள் கூறுவார்கள். மணி மேகலை நூலாசிரியராகிய சாத்தனுர் காலம் கி. பி. 2-ஆம் நூற்ருண்டு என்பர். இவர் காலத்திற்கு முன்பு சிவபெரு மானுக்கும் பார்வதி தேவியார்க்கும் திருமணம் நடைபெறும் சமயம் தென்றிசையைச் சமப்படுத்த அகத்தியர் தமிழகம் வந்தார் என்றும் வரும்பொழுது சிவபெருமானின் திருமுடிக் கங்கை நீரைத் தமது கமண்டலத்தில் பெற்று வந்தாரென்றும் குடகு நாட்டின்கண் வந்தபோது அக்கமண்டலத்தை அந்தணச் சிறுவனுக வந்த விநாயகப் பெருமானிடம் கொடுத்தாரென் றும், அவர் அதனைக் கீழே வைத்தபொழுது காகம் வந்து கவிழ்த்தது என்றும் அதுவே காவிரியாக வந்ததென்றும் கந்த புராணம் கூறுகின்றது. இவ் வரலாற்றை இவ்வாறு "கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை" என்று கூறியிருப்பதால் மேலே கண்டவாறு விநாயகரை 7-ஆம் நூற்ருண்டிலிருந்த சிறுத் தொண்டராகிய பரஞ்சோதி முனிவர் வாதாபியிலிருந்து தமி ழகத்திற்குக் கொண்டுவந்தார் என்று கூறுவது பொருந்தாத தொன்ரும்.

"சுரகு லாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளுந் தலைக்கணி யாக்குவாம்."

இச்செய்யுள் சிவப்பிரகாச சுவாமிகள் எழுதிய பிரபுலிங்க லீலையில் உள்ளது. 'ஒரு அமயம் வானவர்கோன் சீகாழியம் பதியில் நந்தவனம் வைத்து உண்டாக்கினுன். அந்த நந்தவனம் தழைக்கவேண்டி நெடிய கடலைக் குடித்தவனுகிய அகத்திய முனிவருடைய கமண்டல நீரைக் காகமாகச் சென்று கவிழ்த்தருளிய விநாயகர் திருவடிகளை நாடோறும் முடிமேற்கொள்வாம்,' என்ற பொருள்படப் பாடப்பட்டுள்ளது. இதிலிருந்து சிவப்பிரகாச சுவாமிகள் "கரகநீரைக் கவிழ்த்த மதகரி" என்பதற்குக் கமண்டல நீரைக் காகமாகச் சென்று கவிழ்த்தருளிய விநாயகர் என்றே பொருள் காண்கிருர்.

திருமூலரும் "ஐந்து கரத்தனை யானை முகத்தனை........." என்று விநாயகர்க்கு வணக்கம் கூறியிருக்கிருர்,

தவிர உலகிலுள்ள பற்பல நாடுகளில் வெட்டுமிடங்களில் புராதன விநாயகர் விக்ரஹங்கள் கிடைப்பதாலும் மெக்ஸிகோ ப்ரசீல், எகிப்து, பேபிலோன் முதலிய இடங்களில் விநாயகர் உருவங்கள் இன்றும் காணப்படுவதாலும் விநாயகர் வழிபாடு பல ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே தொன்று தொட்டு நிலவியுள்ள ஒன்று என்று அறியலாம்.

7. **விநாயகரை வழிபடும் பிற சமயத்தார்கள்** :—வைணவர்கள் பெருமாள் கோயில்களில் விநாயகரைத் தும்பிக்கை ஆழ்வாராகக் கொண்டு வழிபடுவதாலும், வில்லிபுத்தூராழ்வார் ப்ாரதம் பாடியகாலை விநாயகர் காப்புச் செய்யுள் பாடி அதன் பின்னர் நூலைப் பாடி இருப்பதாலும், ஓங்காரம் விநாயகரைக் குறிக்கும் என்றறிந்தும், 'ஓம்' என்பதனைச் சமணர் ஒப்புக்கொள்வதாலும் விநாயகரைப் பிற சமயத்தாரும் வழிபடுவதுண்டு என்பதை அறியலாம்.

8. **விநாயகர் திருவுருவ வமைப்பு** :—விநாயகர் உருவமே ஓங்காரம். அது ஞானத்தின் வடிவமாகும். விநாயகருக்கு முகம் யானை முகம். உடல் தேவ உடல். கால்கள் பூதத்தின் கால்கள். எனவே எல்லாப் பொருள்களுக்கும் அறிகுறியாக அவர் உருவம் விளங்குகின்றது. சிவபெருமான் எவ்வாறு ஆண் பெண்ணுகத் திகழ்கிருரோ அவ்வாறே விநாயகரும் விளங்கு

கிறார், சிவபெருமானுக்குரிய சடை, பிறை, முக்கண் முதலியன இவருக்குமுண்டு, ஒற்றைக் கொம்பு, பாசம், அங்குசம் முதலியன அம்மையை நினைவூட்டுவனவாகும். இக்குறிப்புக்கள் இவர் சிவசத்தி வடிவினர் என்பதைக் காட்டுகின்றன. யானையின் தலை, காதுகள், துதிக்கை மூன்றும் சேர்ந்து 'ஓம்' என்பதனைக் காட்டுகின்றது.

உருமூன்றாய் உணர்வின்கண் ஒன்றானானை
ஓங்கார மெய்ப்பொருளை உடம்பின் உள்ளால்
கருவின்ற வெங்களவை அறிவான்தன்னைக்
காலனைத்தன் கழலடியாற்காய்ந்து மாணிக்கு
அருளின்ற ஆரமுதை அமரர்கோனை
அள்ளூறி யெம்பெருமான் என்பார்க்கென்றும்
திருவின்ற தென்பரம்பைக் குடியின்மேய
திருவாலம் பொழிலானைச் சிந்திநெஞ்சே.

— தேவாரம்

மாயன், சேயோன், வேந்தன் எனத் திருவுரு மூன்றென்றும் அவ்வுரு மூன்றையும் அருளால் உணர்வார் உணர்வின்கண் அது ஒரு முழுமுதலாம் என்றும், அம்முதல் 'ஓம்' மொழி உண்மைப் பொருளாய் உயிர்க்குயிராய் நிற்கும் என்றும் ஆளுடைய அரசு கூறியிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.

உலகம் உயிரில்லதும் உயிருள்ளதும் என இருவகைத்து. உயிர் உள்ளவற்றை ஓரறிவு முதல் ஆறறிவுவரைப் பகுப்பார்கள். உயிரில்லதும் ஐயறிவுவரையுள்ள உயிருள்ளதும் அஃறிணையென்றும், ஆறறிவு பெற்ற மக்கள், தேவர், நரகரை உயர்திணையென்றும் இலக்கண நூலார் இயம்புவர். யானை முகம் ஐயறிவுகொண்ட அஃறிணையாகும். விநாயகருடைய மார்பும் கைகள் நான்கும் ஆறறிவுகொள் மக்களுடையவை போன்றவைகளாம். மிகுதியாக ஒருகை இருக்கக் காரணம் தெய்வ நெறி நின்றோர் நன்னெறியைத் தாமும் ஒழுகிப் பிறரையும் ஒழுகச் செய்யும்படி தூண்டித் துணைபுரியும் குறிப்பேயாகும். கோயில்களில் யானை முகத்தையும், காளைமாட்டு முகத்தையும் காண்கிறோம். யானை முகம் விநாயகரையும்

காளைமாட்டு முகம் நந்தி தேவரையும் குறிக்கும். இவைகளின் உண்மைப்பொருள்கள் முறையே இன்பத்தையும் அறத்தையும் குறிப்பனவாகும்.

விநாயகர் ஆறு ஆதாரங்களில் முதன்மையான மூலா தாரத்தின் இறைவராவர். வம், சம், ஷம், ஸம் என்ற நான்கு எழுத்துடன் கூடிய நான்கு தளமுடைய கமலம் வீணு தண் டத்தின் அடிப்பாகத்தில் உள்ளது. சித்த லக்ஷ்மி, வல்லபை என்ற இரண்டு சக்திகளுடன் விநாயகர் அங்கு வீற்றிருக்கிறார்.

மற்றத் தெய்வங்களுக்கு ஏற்ற சக்தி அமைவது போன்று விநாயகருக்கென சக்தி இல்லை. ஆண் பெண் என்ற வேறு பாட்டிற்கு அவர் அப்பாற்பட்டவர். சித்தி, புத்தி என்ற சக்திகளையும், சித்தலக்ஷ்மி வல்லபை போன்ற சக்திகளையும் அவரோடு இணைத்து வைத்துக் கூறுவது அவர் பெருமையை விளக்குவதற்காகும். ஒரு கூறு கொம்பு உண்மையால் ஆண் போலவும், மற்றொரு கூறு கொம்பு இன்மையால் பெண் போலவும் இரண்டுங் கூடியபடியால் அலி போலவும் விளங்கு தலின் அவன், அவள், அது என்னும் ஆண், பெண், அலியாகி எல்லாமாய் அல்லவுமாய் யார்க்குஞ் சொலற்கரிதாய் விளங்கும் சிவத்தின் இயல்பையும், அதுகொண்ட சக்தியின் இயல்பையும் (அர்த்தநாரீசுர வடிவத்தின் தன்மையையும்) இவ்வுருவம் காட்டுமென்பார்கள்.

9. விநாயகர் அவயவச் சிறப்பு :—

1. **யானை முகம் :—**வாழ்க்கையெனும் வனத்திடையே அலை கின்ற உயிராகிய மதங்கொண்ட யானை தன்னினத்தவன் என்று எண்ணியாவது தன்னை வந்து அடைதல் வேண்டும் என்னும் பெருங் கருணையைக் காட்டுவதுடன் பிரணவத்தின் உருவத்தையும், ஞான சொரூபம், சிவாம்சம் என்ற குறிப்புக் களையும் காட்டிநிற்கின்றது.

2. **மூன்று கண்கள் :—**தந்தையாரைப்போன்று விநாயகருக் கும் மூன்று கண்கள் உண்டு. சாதாரணமாகவுள்ள இரண்டு கண்களும் புறவுலகைக் காண்பதற்கு அமைந்தவைகள். நெற்

றியில் உள்ள மூன்ருவது கண் அகவுலகை நோக்கத் துணை செய்யும் பர ஞானத்தைச் சுட்டிக் காட்டுகிறது. இம்மை மறுமை ஆகிய இரண்டையும் உள்ளபடி அறிதலே நல்லறிவுடைமையாகும்.

3. **காதுகள்** :—விநாயகர் தனது அகன்ற காதுகளை விரித்த வண்ணமாயிருக்கிருர். மனிதன் மிகுதியாகப் பேசுகிருன். குறைவாகக் கேட்கிருன். விநாயகர் பேசுவது குறைவு. கேட்பதில் கண்ணும் கருத்துமாயிருக்கிருர். நல்லறிவைப் பெருக்குவோர் தாம் பேசுவதைக் குறைத்தும், கேட்பதை மிகுதிப்படுத்தியும் பழகுதல் நன்று என்ற குறிப்பினைக் காட்டுகின்றது.

4. **கோடுகள்**:—விநாயகரது கொம்புகளுள் ஒன்று முகத்தில் உள்ளது. மற்ருென்று அவருடைய திருக்கரத்தில் உள்ளது. திருக்கரத்தில் உள்ள கொம்பே மகாபாரதம் எழுத எழுத்தாணியாக உதவியது. இடையில் எழுத்தாணி ஒடிய தனது தந்தங்களில் ஒன்றை ஒடித்து அவ்வெழுதும் வேலையை முடித்தார். அதனுல் தனது திருமேனியில் ஊனம் ஏற்பட்டது என்றறிந்து ஒடித்த தந்தத்தைத் தனது வலக்கரத்தில் வைத்து நோக்கிக்கொண்டிருக்கிருர். இது தியாகத்தின் அறிகுறியாகும். இதனை,

"தழைவிரி கடுக்கைமாலைத் தனிமுதல் சடையிற் சூடும்
குழவிவெண் திங்கள் இற்ற கோட்டது குறையென்
றெண்ணிப்
புழைநெடுங் கரத்தாற் பற்றிப் பொற்புற இணைத்து
நோக்கும்
மழைமதக் களிற்றின் செய்ய மலரடி சென்னி
வைப்பாம்."

என்ற நைடதச் செய்யுளாலும் அறியலாம்.

5. **ஐந்து கரங்கள்** :—பொதுவாகத் தெய்வங்களுக்கு நான்கு கைகள் உள்ளன. விநாயகருக்குமட்டும் துதித்தற்குப் பெற்ற துதிக்கையும் சேர்ந்து ஐந்து கைகள் உண்டு. 'ஐந்து கரத்தனை' என்று திருமந்திரம் தெரிவிக்கின்றது.

(அ) வலது கீழ்க்கை :—வானவர்களைக் காத்தற்காக இக் கரத்தில் ஒடிந்த தந்தத்தை வைத்திருக்கிருர். இதுவே மாபாரதம் எழுத எழுத்தாணியாகவும் உதவியது. இது துன்பத்தால் தம்மை அடைந்தவர்க்கு அஞ்சாமையை அளிக்கக் கூடியது. அபயகரமாக இருப்பதும் இதுவே. எழுத்தாணியினியல்பு : இது எழுதுகோலாகவும், கல்விபயிலுதற்கு அறிகுறியாகவும் நினைவாற்றலை வழங்கிவளர்ப்பதாகவும் இருந்துகொண்டிருக்கின்றது. எவனெருவன் எண்ணவும் எழுதவும் கருதுகின்ருனே அவன் சிறந்த மனிதனுவான். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்ற கருத்தை வலியுறுத்துவதாகவுள்ளது. அறிவை விரும்பும் ஒருவர் விநாயகர் வழிபாடு செய்யாமலிரார் என்பதையும் அறிவிக்கின்றது. எழுத்தாணி அயனின் படைத்தற்ருெழிலை யுணர்த்தும்.

(ஆ) இடது கீழ்க்கை :—இக்கரத்தில் மோதகம் வைத்திருக்கிருர். மோதகம், எல்லா இன்பங்கட்கும் இருப்பிடம் இறைவனே என்பதைக் காட்டுகின்றது. உணவின்றி யாரும் உயிர்வாழ்தல் இயலாது. நல்லுணவு உண்டு உயிர்வாழவும் அறிவைப் பெருக்கவும், நல்வாழ்வு மேற்கொள்ளவும் மனிதன் கற்றுக்கொள்ள வேண்டும். வரதகரமாக இருப்பதும் இதுவே. இது திருமாலின் காத்தற்ருெழிலை உணர்த்தும்.

(இ) வலது மேல்கை :—இக்கரத்தில் யானைத்தோட்டி என்னும் படைக்கலம் உளது. இதனை அங்குசம் என்றும் கூறுவர். அங்குசம் யானையை அடக்கும் பாகர்பால் இருக்க வேண்டுமேயன்றி யானைத் திருமுகம்கொண்ட விநாயகப் பெருமான் தம் திருக்கரத்தே அவ்வங்குசத்தினைக் கொண்டு இருப்பது அவர் யாவராலும் அடக்கப்பெருதவர், அனைவரையும் அடக்க வல்லவர் என்ற குறிப்பினை உணர்த்துவதாகும். யானைப்பாகன் தான் ஏறிச்செல்லும் யானையை அங்குசத்தால் தான் கருதிய நெறியே செலுத்துதல்போல, யோகியானவன் பிராணவாயுவை இடைகலை பிங்கலை வழியாகச் செல்லவிடாமல் சுழிமுனை நாடியில் ஆருதாரங்களிலும் செல்லுமாறு விடுத்து அடக்குதலினுல் தன் மனத்தையும் உலக நுகர்பொருள்களில் செல்லவிடாது தான் எண்ணிய இறைவனையே

எப்பொழுதும் நினைந்திருக்கச் செய்கிறான். இதுவே தியானம் ஆகும். ஆகவே அங்குசம் மும்மலத்தையும் நாசம்செய்து மக்களை அடக்கி நல்வழிப்படுத்த இருக்கின்றது என்ற குறிப்பு அறியத்தக்கதாகும். இது உருத்திரனின் அழித்தற்றொழிலை உணர்த்தும்.

(ஈ) **இடது மேல் கை:**—இக்கரத்தில் பாசக்கயிறு வைத்திருக்கிறார். இது கொடியவர்களைத் துன்புறுத்துவதாகும். பாசத்தாற்பற்றி அங்குசத்தால் அழிப்பதாம். இது மகேசனின் மறைத்தற்றொழிலை உணர்த்தும்.

அங்குசம், பாசம் இரண்டும் தன்னைப் பந்தப்படுத்துபவரும் நடத்துபவரும் ஒருவருமிலர் என்பதைக் காட்டுவதால் தனக்கு மேம்பட்ட கடவுள் இல்லை என்பதை விளக்குகிறது.

"ஏர்கொண்ட தன்னைத் தளைப்பவரும் ஊருநரும்
இலரென்ப
துலகு தேறற்கு—எடுத்தவெம் பாசமோ
டங்குசந்தன் கரத்தேந்தி"

என்ற கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்த் திருப்பாடலாலும் இவ்வுண்மை உணரத்தக்கது. முன்னே கூறப்பட்ட தமக்குமேல் ஒரு நாயகம் இல்லாதவர் என்பதைக் குறிக்கும் 'விநாயகர்' என்ற சொற்பொருளும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. பாசம் அங்குசம் இவைகளை வைத்துக்கொண்டு நம்மனோரைத் தீநெறியின்கண் செல்லவிடாது ஈர்த்து ஒறுத்து நடத்தி நன்னெறியின்கண் செலுத்திக் காப்பதாகிய பேருபகாரத்தை விநாயகப்பெருமான் செய்தருளுகிறார்.

(உ) **துதிக்கை:**—தமது தாய்தந்தையர்க்குப் பாதபூசை, திருமுழுக்குச் செய்து துதிப்பதற்காக இத்திருக்கரத்தில் குடம் ஒன்றை வைத்திருக்கிறார் என்பதை **"அரதனக்கலச வியன்கரம் தாய்தந்தையர்க் காக்கி"** என்ற தணிகைப்புராணப் பாவால் அறிக. ஊறு உணர்ச்சியும், மணம் அறிதலும் உடைய துதிக்கையானது உயிர்களின் பக்குவ நோக்கி அருள் செய்யும் திருக்குறிப்பினைக் காட்டும். இது சதாசிவத்தின் அருளற்றொழிலை உணர்த்தும்.

"தோற்றந் துடியதனிற் றேயுந்திதி யமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார—மூற்றமா
வூன்று மலர்ப்பதத்தி லுற்றதிரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்றவாறு படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களையும் செய்யும் சிவபெருமானைப்போல் விநாயகரும் தமது ஐந்து திருக்கரங்களாலும் ஐந்து பெருந் தொழில்களையும் செய்கிறபடியால் விநாயகர் சிவபெருமானின் வேறல்லராவர்.

துதிக்கையானது எந்தப்புறத்தில் வளைந்து சுருண்டு இருக்கின்றதோ அதற்கேற்ப விநாயகரை வலம்புரி விநாயகர் என்றும் இடம்புரி விநாயகர் என்றும் கூறுவார்கள். தாம் பெற்றோரைத் துதிப்பதுபோல் நம்மனோரையும் 'துதிக்க' என அறிவிக்கும் குறிப்பும் உணரத்தக்கதாகும்.

6. உடல்:—உலக முழுதும் அவர் உடம்பாகிறது. அதனிடத்து வலியும் உறுதியும், தூய்மையும், வாலறிவும் பொலிவதைக் காணலாம். "துப்பு ஆர் திருமேனி" என்பதில் 'துப்பு' என்னும் சொல்லில் மேற்கூறிய கருத்துக்கள் இருக்கின்றன. மேலும் விநாயகருக்கு ஐந்தறிவு நிலைகளும் துரியாதீதநிலையாகப் பேரொளி நிலையில் விளங்குதலும் உண்மையால் உமாபதி சிவாசாரியார் சிவப்பிரகாசம் காப்புச் செய்யுளில் "ஒளியான திருமேனி உடையவர்" என்று கூறியிருத்தல் காண்க. பருத்த உடல்களில் யானையின் உடல் முதன்மையானதும் அடக்கமும், அமைதியும் உடைமைக்கு அறிகுறியும் ஆகும்.

7. **வயிறு:**—திருமேனிக்கு ஒப்பப் பேழை வயிறு உள்ளது. அவ்வயிறு வானைக் குறிக்கக் கூடியது. வான் எல்லாப் பொருள்களுக்கும் இடந்தந்து அவை ஒடுங்கவும் இடமாக இருந்து பின்னர் அவை தோன்றவும், இருக்கவும் இடமாக இருப்பதுபோல் உயிர்களும் உலகங்களும் அவ்வயிற்றின்கண் தோன்றி இருந்து ஒடுங்குகின்றன என்ற உண்மை உணரத்தக்கது.

"புந்திவனம் சூழும் பொருவில்லாப் பிள்ளையார்
தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணி அம்மானை
தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணி ஆமாகில்
இந்த வயிற்றுக்கு இரைஎங்கே அம்மானை
இன்றென்றே ஈசன் இரக்கலுற்ருன் அம்மானை"

என்ற மூவர் அம்மானை நூற்பாடலும் அறிந்து இன்புறத் தக்கது.

8. **திருவடிகள்:**—திருவடி ஞானத்தைத்தரவல்லது. நம் முன்னோர் திருவடியையே ஞானமாகக் கொண்டார்கள். குமர குருபர சுவாமிகள் தம் கந்தர் கலிவெண்பாவில் முருகன் திருவடிகளைக் குறிப்பிட வந்தவர் "ஞானந் திருவடியா" என்று கூறியிருக்கிருர். ஞானத்தினுல்தான் உயிர்கள் மலங்கள் ஒழிந்து விளக்கம் எய்துகின்றன.

9. **மூஷிகம்:**—(பெருச்சாளி) வாகனம், ஆணவமலம் எத்தகைய வலிமையுடையதாயினும் இறைவன் முன்னிலையில் அடங்கி இறைவனுக்குக் கீழ்ப்படிந்து கிடக்கும் என்பதைத் தெரிவிக்கின்றது. இறைவனுயினோர் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வாகனமுண்டு. விநாயகர்க்குப் பெருச்சாளி வாகனமாகும். பெருச்சாளிமீது யானை ஏறிச்செல்வது இயலாததொரு செயலாகும். சிறியது பெரியதைத் தாங்க ஆற்ருது அழிந்துபட நேரிடும். ஆனுல் அவ்வாறு ஏற்படவில்லை. உயிர் பெரியதில் மிகப் பெரியதாகவும், சிறியதில் மிகச் சிறியதாகவும் இருக்கிறது. அதனுல் சிறிய உடம்பில் இயங்குவது சிறிய உயிர் என்றும் பெரிய உடம்பில் இயங்குவது பெரிய உயிர் என்றும் எண்ணுதலாகாது. வலிமையானதென்றும் இலேசானதென்றும் பூதப்பொருள்களைப்பற்றிக் கூறலாம். ஆனுல் அறிவுப் பொருள்களைப்பற்றி அங்ஙனம் கூற இயலாது. அறிவு வளர்வதால் மூளைக்கோ உடலுக்கோ வலிமை மிகுகின்றது என்று சொல்வதற்கில்லை. உடலும் உயிரும் சேர்ந்து ஜீவனுகும். உடல் வடிவத்தில் உயிர்கள் யாவும் எல்லையில் அடங்கும்

சிறு உயிர்ப் பொருள்களாம். ஜீவனின் வடிவத்திலோ ஒவ்வொரு உயிரும் அளப்பரும் பெரிய பொருளாம். இக்கருத்தைத்தான் பெருச்சாளி வாகனம் தெரிவிக்கின்றது.

விநாயகப் பெருமானுடைய திருவுருவம் 32 வகையினது என்பதும், அவர் தம் படைக்கலங்கள் 29 வகையின என்பதும் பிறவும் சைவ ஆகமங்களில் விரித்துக் கூறப்படுகின்றன.

10. **விநாயகர் வழிபாடு:** இத்தகைய மாண்பினைக்கொண்ட விநாயகர் வழிபாடு நம் நாட்டில் குறிஞ்சிநிலத்தார் செய்து வந்த வழிபாடென்று கூறலாம். அஃது எவ்வாறெனின், யானை மலைச்சாரற் காட்டிலே இருப்பதால் அவ்வுருவ வழிபாடு குறிஞ்சி நிலத்தார் பண்டுதொட்டு ஆற்றிவந்திருக்கலாமென்று கருதலாம். எனவே, பிரணவ வழிபாட்டின் பிறப்பிடம் முதலில் தமிழ்நாட்டின் குறிஞ்சி நிலமென்றுங் கூறலாம். விநாயகர் வழிபாட்டில் பலவகை உண்டு. 1. கோவில் கட்டுவித்தல், 2. கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) செய்துவைத்தல், 3. அபிஷேகம் அலங்காரம் செய்துவைத்தல், 4. அவர் முன்னிலையில் தேங்காய், பலவகையான உணவுப்பொருள் படைத்தல், 5. விநாயகரை வலம்வருதல், 6. மும்முறை தலைகுட்டித் தோப்புக்கரணம் போடுதல் முதலியனவாகும்.

" இம் முறை யாவராக விருங் கையான் மத்தகத்தி
னம் மெதிர் புடைத்துச் செல்லு நன்மையை
யுடையராயிற்
கொம்மென வவர்க்குத் துன்பக்கோ ளெலா மகற்றிச்
செல்வம்
விம்முறக் கொடுத்து மென்று விநாயக ரருளிப்
போனார் "

— விநாயகபுராணம். இராவணன் பூசித்த படலம்

எவரேனும் தங்கள் தலையில் குட்டிக்கொண்டு வழிபாடு செய்யின் அவருடைய துன்பங்களனைத்தையும் போக்கிச் செல்வம்

கொடுத்துவிடுவோமென்று விநாயகர் அருள்செய்ததாகக் கூறப்பெற்றிருக்கிறது.

"மறுவற விநாயகன் மலர்ப்ப தங்களி
னுறுமுறை பூசனையு ஞற்றுவோ ரெலா
மறுகு கொண்டருச்சனை யாற்றல் வேண்டுமால்
முறுகிய வன்பினோ டெ௳ன மொழிந்தனன்."

— விநாயகபுராணம். சந்திரனனுட்டித்தபடலம்

இதனால் விநாயகர் வழிபாடாற்றின் அவர் திருவடிக்கு அறுகம் புல்கொண்டு அருச்சித்தல் வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. "கைத்தலம் நிறைகனி அப்பமொடவல் பொரி கப்பிய கரிமுகன் அடிபேணி" என்றமையின் விநாயகருக்குக் கனி, அப்பம், அவல், பொரி இவை ஏற்றவையாதலின் இவை கொண்டும் வழிபாடு செய்யலாம். தமிழகத்தில் விநாயகர் கோவில் இல்லாத கிராமம் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம். சில ஊர்களில் தெருக்களுக்குப் பிள்ளையார் கோவில் தெரு என்றும் பெயர் வழங்குவர். ஏதாவது நற்செயல் செய்யும்போதெல்லாம் மஞ்சள் பிள்ளையார், சாணிப்பிள்ளையார், மண்பிள்ளையார் பிடித்துவைத்து வழிபாடு செய்துவிட்டுப் பின்னர், அச்செயலைத் தொடங்குவார்கள். தமிழர், 'உ' பிள்ளையார் சுழி எழுதிய பிறகே எதையும் எழுதத் தொடங்குவார்கள். தமிழ் நூல்களில் முதலில் பிள்ளையார் வணக்கமாகக் காப்புச் செய்யுளைச் செய்து பின் நூலைத் தொடங்குவார்கள். நாம் வாழ்வதற்காகவே இறைவனை முதலில் வாழ்த்தி வழிபடுகிறோம் என்பதனை மாணிக்கவாசகர்,

"வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே"

என்று கூறியிருப்பதாலறியலாம். பிறகு, தம்மையே பற்றி நின்ற பற்றுக்கள் நீங்கவும் இறைவனை வழிபட வேண்டுமென்

பதனை வள்ளுவர், "பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு" என்று கூறியிருப்பதாலும் அறியலாம். ஓங்கார வடிவினராகிய இறைவர் உயிர்களை உய்விக்கத் திருவுளங்கொண்டு விநாயகர் திருவுருவங்கொண்டெழுந்தருளியிருக்கிருர். அவரை வழிபடும் அன்பர்கள் ஓங்காரத்தினுட் பொருளுணர்ந்து வழிபடுவது சாலவும் நன்று. வழிபடும் போழ்து புறத்தின்கண்ணும், அகத்தின்கண்ணும் அவ்விறைவரை வைத்து வழிபடலாம். காலைநீராடித் தூய இடத்தில் விநாயகர் உருவம் வைத்து அபிஷேகம் அலங்காரம் முதலியன செய்து சோறு வகைகள், பலகாரவகைகள், கனிகள், நீர் மோர், அடைக்காய் முதலியவை வைத்து நிவேதனஞ் செய்து நீர்விளவி தூபதீபங்கொடுத்து வலம்வந்து அன்போடு திருவடிகளை வணக்கஞ் செய்வது புற வழிபாடாகும். உள்ளம் என்கிற கூடத்தில் ஊக்கமென்கிற கட்டுத்தறியை நிலைநிறுத்தி அன்பு என்கிற கயிற்றுல் அவ்விறைவனைக் கட்டி, பசுபோதமென்கிற உணவையிட்டு வழிபாடாற்றுவது அகவழிபாடாகும். இதனை,

"உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி யுறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்"

என்ற திருவிளையாடற் புராணத்தால் தெளியலாம். விநாயகரை முதற்றெய்வமாகக் கொண்ட மதத்திற்குக் கணுபத்திய மதம் என்பது பெயர்.

சதுர்த்தி வழிபாடு:– சிவபெருமான் உமாதேவியுடன் சிங்கார வனஞ் சென்று அங்குச் சித்திர மண்டபத்தில் எழுதப்பட்டுள்ள மந்திரமயமான சித்திரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்பிரணவ மந்திரம் இரண்டு யானைகளின்

வடிவமாக எழுதியிருப்பதைக் கண்ட உமாதேவி அதிசயித்து, சிவபெருமானை இஃதென்ன என்று வினவ, அதற்குச் சிவ பெருமான், அவ்விரண்டு யானைகளுள் ஒன்று எனது வடிவ மென்றும், மற்றொன்று உன்னுடைய வடிவமென்றுங் கூறினர். அத்தகைய பிரணவத்திற்குரிய பொருள் யாமே எனக் கூற இருவரும் அச்சித்திரத்தை நோக்கினர்கள். அச்சித்திரத்தி னின்றும் விநாயகர் அவதாரஞ் செய்ததாக முன்பு கூறினேன். அவர் திருவவதாரஞ் செய்த நாளே ஆவணித் திங்கள் வளர் பிறை நான்காம் நாளாகும். ஆகையால், ஆவணித் திங்கள் சிறப்பினைக் கொண்ட திங்களாகும். அத்திங்கள் வளர்பிறை நான்காம் நாளில் விநாயகரை வழிபடுதல் மிகவும் நன்று.

"பந்த மறும் ஆவணித்திங்களின் வளரும்
சதுர்த்தி யெனப்பகர்வர் அற்ருல்
அந்தமதிச் சதுர்த்தியிற் பூசிப்பவருக்
குறுபயனுர் அளக்க வல்லார்''

இவ்வாறு விநாயக புராணம் உணர்த்துகின்றது. இதுவே சதுர்த்தி வழிபாடாகும்.

இச்சதுர்த்தீயில் விநாயகரைச் சந்திரன் வழிபாடு செய்தது :–முன்ெருரு காலத்தில் அயன் சிவனைத் தரிசிக்கக் கைலைக்குச் சென்ருர். அவ்வமயம் சிவபெருமான் மூத்த பிள்ளையாகிய விநாயகருடனும், இளைய பிள்ளையாகிய முருகனுடனும் இருந் தார். அவ்வமயம் நாரதர் அங்கு வந்தார். நாரதர் ஒரு மாங்கனியுடன் வந்து சிவபெருமான் முன்னிலையில் வைத்து வணங்கினர். பின் தன் யாழைக்கொண்டு இசை முழக்கினர். சிவபெருமான் என் இவ்விரு மக்களுள் இக்கனியை யாருக்குக் கொடுப்பது என்ருர், அயன் இளையவனுகிய முருகனுக்குக் கொடுக்கக் கூறினர். அவ்வாறே இளையோனுக்குக் கொடுத் தார். விநாயகர் கோபித்தவர்போல் அயனை நோக்கினர். உடனே அயன், விநாயகரடி வீழ்ந்து மன்னிக்குமாறு வேண்டி ஞர். விநாயகர் மனமிரங்கி அருள் புரிந்தார். அவ்வமயம் சந்திரன் நகைத்தான். அச்செயலை விநாயகர் பார்த்தார். அவன்மீது சினங்கொண்டார். சந்திரனை நோக்கி, 'அச்ச

யின்றி நகைத்தனையாதலின், 'நீ உலகில் ஒளியின்றி மறைந்து போவாய். உன் உருவத்தைக் கண்டவர்களும் துன்பமடையக் கடவர்' என்று சபித்தார். சந்திரன் ஒளியின்றி வருத்தத் துடன் தன்னிடஞ் சென்றான். இதனையறிந்த வானவர்கள் தங்களுக்குச் சந்திரனின் அமுதபானங் கிடைக்காததுபற்றித் தம் தலைவன் இந்திரனிடம் இதனைத் தெரிவித்தார்கள். வான வர்கோன் இதனை விநாயகரே தீர்க்கவேண்டுமென்றார். பிறகு வானவர்களும் வானவர் கோனும் விநாயகரிடம் சென்றார்கள். விநாயகரைத் தரிசித்துச் சந்திரன் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டினார்கள். அதற்கு விநாயகர் இரக்கங் கொண்டு சந்திரனைச் சாபத்தினின்றும் விடுவித்து முன்போல் ஒளிவிட்டிருக்க அருள் புரிந்தார். ஆனால், ஆவணித்திங்கள் வளர்பிறை நான்காம் நாளில்மட்டும் அச்சந்திரனை யாரும் பார்க்கலாகாதென்றும், பார்த்தால் அல்லலில் ஆழ்வார்க ளென்றும் ஓதியருளினர். இதனை விநாயக புராணம் சந்திர னனுட்டித்த படலத்தில்,

> "சிங்கமா மதியிடைச் சேர்முன் பக்கத்துத்
> தங்குநஞ் சதுர்த்தியிற் றன்னைக் காணற்க
> மங்குல்வான் முன்புபோன் மற்றை நாளெலா
> மங்கவ னுருவினை யாருங் காண்கவே."

என்று கூறியிருப்பதாலறியலாம். சந்திரனின் சாப நீக்கத்தைக் கேட்ட வானவர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். உமாதேவியார், முருகன், சோமகாந்தன், வேதவியாசர், அயன், அரி, தக்கன், வல் லாளன், விமன், உருக்குமாங்கதன், இந்திரன், திருச்சதமன், திரிபுரன், இந்திராதி தேவர்கள், நளன், சந்திராங்கதன், மன்மதன், உருக்குமணி, ஆதிசேடன், மாபலி, பரசிராமன், இராவணன், அகத்தியர், காசிபர் முதலிய பலர் இச் சதுர்த்தியில் விநாயகரை வழிபட்டுப் பெறற் கரும் பேறு பெற்றார்களென்று நூல்கள் நுவல்கின்றன, ஔவையார் தாம் அருளிச் செய்த 'விநாயகர் அகவலா' லும், நக்கீர தேவர் தாம் அருளிச் செய்த 'விநாயகர் திரு அகவ லாலும்' 'விநாயகர் கவசத்தாலும்' அதிராவடிகள் தாம் அருளிச் செய்த 'மூத்த பிள்ளையார் திரு மும்மணிக் கோவை'

யாலும், நம்பியாண்டார் நம்பி தாம் அருளிச் செய்த 'திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை'யாலும், அருணகிரி நாதர் தாம் அருளிச் செய்த 'முத்தி விநாயகர் அகவலா'லும் விநாயகரை வழிபட்டதாக அறிகிறோம்.

" கரும்பும் இளநீருங் கட்டிக் கனியும்
விரும்பும் விநாயகனை வேண்டி—அரும்பவிழ்தார்ச்
சேரமான் செய்த சிலப்பதிகாரத்தைச்
சாரமாய் நாவே தரி"

என்று சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதவந்த அரும்பதவுரையாசிரியர் தொடக்கத்தில் மூத்தபிள்ளையாருக்கு வாழ்த்துக் கூறியிருப்பதும் ஈண்டு கவனிக்கத்தக்கது. விநாயகர் திருவுருவங்களோ மிகப் பலவாகும். கூத்தாடும் விநாயகர், வல்லபை விநாயகர், சித்திபுத்தி விநாயகர், சங்குபாணி விநாயகர், முக்குறுணிப் பிள்ளையார், ஐம்முக விநாயகர், சித்திவிநாயகர், வெள்ளை விநாயகர், வலம்புரி விநாயகர், முத்திகணபதி, கற்பகப்பிள்ளையார், பொல்லாப்பிள்ளையார், சிந்துரவிநாயகர், சிந்தாமணிவிநாயகர், வாதாபி விநாயகர், பாலசந்திரர், ஏரம்பர், கங்காதரர், முக்கண்ணர், குறுங்கை விநாயகர், முதலியனவாம். பல கோயில்களில் இவ்வுருவங்களைப் பார்க்கலாம். இவ்விநாயகர் எங்கும் நிறைந்தவர். எல்லாமறிபவர். எவரும் வணங்குமியல்பினர். அறிவுக்கறிவாயுள்ளவர். அன்பர்களன்றி மற்றவர்களாலறியப்படாதவர். சொற்பொருளாயுள்ளவர். உலகிலுள்ளோர் தம் அறியாமையைப் போக்கவே அவர் திருவவதாரஞ் செய்ததாகத் தெரிகிறது. மக்கள் தங்கள் பக்குவத்திற்குத் தக்கவாறு வழிபட்டுய்யவேண்டியே அவ்விநாயகர் உருவத்திலும், அருவத்திலும், அருஉருவத்திலும் அமர்ந்திருக்கிறார். நாம் அப்பெருமானை மனம், மொழி, மெய்யால் இடைவிடாமல் வழிபாடு செய்தல் வேண்டும். இதுவே நமது கடமையாகும்.

11. விநாயகரை வழிபடுதலால் உண்டாகும் நன்மைகள் :—

நன்மைகள் இவைகள் என அடியிற்கண்ட, பெருமக்களுடைய திருவாக்குகளால் அறியலாகும்.

1. விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினுல்
கண்ணிற் பணிமின் கனிந்து.

2. திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானேரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

— மூத்த நாயனுர் திருவிரட்டை மணிமாலை

3. நடையூறு சொன்மடந்தை நல்குவது நம்மேல்
இடையூறு நீங்குவது மெல்லாம்—புடையூறு
சேனைமுகத் தாளிரியச் சிறுமுகத் தாறுமதத்
தானைமுகத் தானை நினைத் தால்.

— புறப்பொருள் வெண்பா மாலை

4. வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

— மூதுரை

5. கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலை தீருமே.

6. ஓரானைக் கன்றை உமையாள் திருமகனைப்
போரானைக் கற்பகத்தைப் பேணிஞல்—வாராத
புத்திவரும் வித்தைவரும் புத்திர சம்பத்துவரும்
சத்திதருஞ் சித்திதருந் தான்.

— நக்கீர தேவர் அருளியவை

7. வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

8, வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளி யோடும் தொடரும் வினைகளே.

9, அப்ப முப்பழம் அமுது செய்தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினை யறுமே.

— வேழமுகம் ஔவையார் அருளியது

2. விநாயகர் தோத்திரங்கள்

1, உருகும் அடியார் அள்ளூற
உள்ளே ஊறும் தேன்வருக
உண்ணத் தெவிட்டாச் சிவானந்த
ஒளியே வருக புலன்வழிபோய்த்
திருகும் உளத்தார் நினைவினுக்கும்
சேயாய் வருக எமைஆண்ட
செல்வா வருக உமைஈன்ற
சிறுவா வருக இணைவிழியால்
பருகும் அமுதே வருகஉயிர்ப்
பைங்கூழ் தழைக்கக் கருணைமழை
பரப்பு முகிலே வருகநறும்
பாகே வருக வரைகிழித்த
முருகவேட்கு முன் உதித்த
முதல்வா வருக வருகவே
மூரிக் கலைசைச் செங்கழுநீர்
முனியே வருக வருகவே.

— செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

2. வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

— சேக்கிழார் நாயனார் புராணம்

3. திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

— விருத்தாசல புராணம்

4. மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

5. திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

— கந்த புராணம்

6. வஞ்சகத்தில் ஒன்றானைத் துதிக்கைமிகத் திரண்டானை
வணங்கார் உள்ளே
அஞ்சரண மூன்றானை மறைசொலுநால் வாயானை
அத்தன் ஆகித்
துஞ்சவுணர்க் கஞ்சானைச் சென்னியணி யாறானைத்
துகளெ மானைச்
செஞ்சொல்மறைக் கெட்டானைப் பரங்கிரிவாழ் [கற்பகத்தைச்
சிந்தை செய்வாம்.

— திருப்பரங்கிரிப் புராணம்

7. அருளெனும் கடல்முகந் தடியர் சிந்தையாம்
பொருள்பெறு நிலஞ்சிவ போக முற்றிட
வரமழை உதவுசெவ் வந்தி யானையின்
திருவடி இணைமலர் சென்னி சேர்த்துவாம்.

— செவ்வந்திப் புராணம்

8. புயல்காட்டும் பனிவரையின் பிடிதழுவும் சிவவேழம்
பொருப்பில் வானில்
இயல்காட்டும் இருபிடிசேர் முந்நாலு துதிக்கையன்முன்
ஈன்ற ஞானச்
செயல்காட்டும் ஒருகோட்டின் இருகோட்டு வெண்பிறை
செக்கர் வானே [வாழ்
மயல்காட்டும் திருமேனி மழைமதச்சன் பகக்களிற்றை
மனத்துள் வைப்பாம்.

— திருக்குற்றுலப் புராணம்

9. மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனும்
கரைகாண்பான் முதிர்ந்த நாலாம்
பாகமெனும் மலர்கொண்டு பக்தியெனும்
புனலாட்டிப் பரிந்து சாத்திச்
சோகமெனப் பாவித்துத் துரியமெனும்
விளக்கேற்றிச் சோக நீங்கி
யாகமெனும் கோயிலின்கண் ணறிவென்னுங்
கணப்திக்கே யன்பு செய்வாம்.

10. முன்னவனே யானை முகத்தவனே முத்திநலஞ்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே—மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்றாள் சரண்.

11. கருணைமதம் பொழிமுகத்துக் கணேசர்வர் தமக்கறிவுந்
தொழிலு மான
அருளெனுமுன் மையையெவரும் மறியவவ ருமை
தரித்த ஞான்றும் [யினவ
ஒருமுனியோம் பியதமிழின் அவதரித்த ஞான்றுமுடன்
ஆகித் தோன்றித்
திருவுளத்தின் வழிநிற்கும் சித்திபுத்தி எனுமிவர்தாள்
சென்னி சேர்ப்பாம்,

— விநாயகபுராணம்

அரியலூர்
மணிவாசக மன்றத்தில் கிடைக்கும் நூல்கள் *

---

1. சிவக நம்பி (திரு. அ.மு. சரவண முதலியார் அவர்கள்) ரூ. 1—[illegible]—6

2, கட்டுரைப் பொழில் (,,) ரூ. 2—[illegible]

3. அமுது அடியடைந்த அன்பர் (,,) ராப்பர் ரூ. [illegible]—[illegible]—0
 ,, ,, அட்டை ரூ. [illegible]—[illegible]—0

4. திருவரத்துறைத் தல வரலாறு (திரு, க. முருகேச முதலியார் அவர்கள்) ரூ. 0—8—0

5, விநாயகர் மாண்பு (,,) ரூ. 0—[illegible]—8

6. திருமாபத்தினி (திரு. தி. இராமலிங்க முதலியார் B. A., L. T. அவர்கள்) ரூ. 1—10—0

(அஞ்சற் செலவு பிரத்தியேகம்)

செயலாளர்,
மணிவாசக மன்றம்,
வேளாளத் தெரு,
அரியலூர், S. R. திருச்சிராப்பள்ளி Dt.

அரியலூர்
21—10—'57

---

* இந்நூல்கள் விருத்தாசலம், 41, கடைவீதி, அமுதமொழியார் நூலகத்திலும் கிடைக்கும்.